# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
**இரா. செல்வக்கணபதி**

காப்பியங்களில் கடவுளர்கள்



www.saivamonline.com

# Contact Details



www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 7.காப்பியங்களில் கடவுளர்கள்

கடைச்சங்க நூல்களின் வெற்றி அவற்றின் கவிதை அழகில் இல்லை. கற்பனைப் புனைவுகளோ, அணிநல அழகுகளோ சங்க நூல்களுக்குச் சாகாவரம் தந்துவிடவில்லை. அலங்காரச் சொற்களால் சங்க நூல்கள் அழகு பெற்று விடவில்லை. சந்தங்கள் கலந்திருந்து, சங்க நூல்களை வாழ்வித்திடவில்லை. என்றால், இன்றுவரை சங்க நூல்களின் வாழ்விற்கு மூலகாரணம் எது? அதன் வெற்றிக்கு அடித்தளம் அது தேர்ந்து கொண்ட பாடுபொருள். ஆம். சங்க நூல்கள் மனிதனைப் பாடுபொருளாகக் கொண்டவை. அவன் காதலைக் கண்ணியப்படுத்தியது. அவன் வீரத்திற்குத் திலகமிட்டது. மானுடச் சிக்கல்களும் தீர்வுகளும் கண்டு காட்டப்பட்டன. கவிதையின் பாடு பொருள்கள் பலவற்றுள்ளும் மனிதனுக்கு நிகரான வேறு பொருள் ஒன்றும் இல்லை.

---

*சங்க நூல்கள் மனிதனைப் பாடுபொருளாகக் கொண்டது. அவன் காதலைக் கண்ணியப்படுத்தியது. அவன் வீரத்திற்குத் திலகமிட்டது. மானுடச் சிக்கல்களும் தீர்வுகளும் கண்டு காட்டப்பட்டன. கவிதையின் பாடு பொருள்கள் பலவற்றுள்ளும் மனிதனுக்கு நிகரான வேறு பொருள் ஒன்றும் இல்லை.*

---



www.saivamonline.com

கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்குச் சற்றுமுன்னாகத் தமிழ்க் கவிதைகளில் மானுடம் பின்னுக்குத் தள்ளப்பட்டு இறையவர்கள் அந்த இடத்தில் வந்து அமர்ந்து கொண்டனர். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாகவி பாரதி வந்த பிறகுதான் அந்தச் சிங்காசனம் மீண்டும் மனிதனுக்குக் கிடைத்தது. சங்க நூல்களில் கடவுளர்கள் வருகிறார்கள். அவர்கள் வருகை எல்லாம் மானுட ஆற்றல்களுக்கு உவமை காட்டுவதற்காகவே அமைகிறது. திருமுருகாற்றுப்படையும், பரிபாடல்கள் சிலவும் கடவுளர்களை முதன்மைப்படுத்திய போதும், மனிதனுக்கு இருந்த முதன்மை சங்ககாலம் வரை பறிக்கப்படவில்லை. மானுடம் அப்புறப்படுத்தப்பட்டு, கடவுளர் வந்து அமர்வதற்கு வாய்ப்பாக அமைந்த காலம் ஐம்பெருங்காப்பியங்கள் தோற்றம் கொண்ட காலம். மெல்ல மெல்லக் கடவுளர்கள் மேலெழுந்ததும், மானுடம் பின்னுக்குத் தள்ளப்பட்டதும் இந்த இடைக்காலத்தில்தான். கண்ணகியைப் போல் ஒரு சில மானுடப் பாத்திரங்கள் மீண்டும் உயர்நிலை எய்தியபோதும், மானுடத்தை மானுடமாக முன் நிறுத்த இயலாது கடவுளாகவே முன்னிறுத்த முடிந்தது. காப்பியங்களுள், கடவுளர் வருகை வளர்ந்தமைந்த தடங்களை அடையாளப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த ஆய்வு.

## ஐம்பெருங்காப்பியங்கள்

வட மொழியில் தோன்றிய இரகுவம்சம், குமார சம்பவம், சிசுபால வதம் என வழங்கப்படும் மாகம், கிராதார்ஜுனியம், நைடதம் முதலிய ஐந்து நூல்களைப் பஞ்சகாவியம் என அழைப்பர். இதைப்போல், தமிழில் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி முதலிய ஐந்து நூல்களை, ஐம்பெருங் காப்பியம் என்று வழங்கும் மரபு நிலவுகிறது. ஆயினும் இப்பாகுபாட்டை முதற்கண் தமிழில் பதிவு செய்தவர் யார் என்பதையோ, இக்காலத்தில்தான், இப்பகுப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதையோ அறிந்துகொள்ள இயலவில்லை.

பல நூல்களை, ஒரு தொகுதியாக்கிக் குறியீடு செய்வது, தமிழ் மொழிக்குப் புதிது அன்று. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, பன்னிருதிருமுறை, நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் என்பன, தமிழில் போற்றப்பெற்று வருவன. இது ஒரு பாதுகாவல். பட்டியலில் காணும் நூல், எங்கே என்று, தேடிக்காணும் முயற்சிக்கு வித்திட்ட அரிய உத்தி. இதனால் பல நூல்கள் வாழ்வு பெற்றன.



www.saivamonline.com

பிற்காலத்தில் தோன்றிய பழம்பாடல் ஒன்றே, முதன் முதல், ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொகுப்பில் இடம் பெறும் நூல்கள் எவை என்பதை அறிமுகம் செய்விக்கிறது.

*சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்*
*கந்தா மணிமேகலை புனைந்தான் - நந்தா*
*வளையாபதி தருவான்; வாசவனுக்கு ஈந்தான்*
*திளையாத குண்டல கேசிக்கு*

என்பது அப்பாடல். காலத்தால், கதை பிறந்த மண்ணால், கதைக் கருவால், சமயத்தால் வேறுபாடுகள் கொண்ட இவ்வைந்து நூல்களையும், ஒரு தொகுதிக்குள், எப்படிக் கொண்டு வந்தனர் என்பது விளங்கவில்லை. பிறதொகைகளில், இக்குறை இல்லை. இதைப்போல், ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற பகுப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வரிசை முறை

மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனார் பாடிய பிறகே, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்பர் ஆய்வறிஞர். எனவே, கால அடிப்படையில் மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என வரிசைப்படுத்துவதே முறை. என்றாலும் , வழக்கில், சீவகசிந்தாமணியே முன்வைத்து எண்ணப்படுவதால், இவ்வாய்விலும் மரபு முறையே பின்பற்றப்பட்டுள்ளது. வளையாபதி, குண்டலகேசி இரண்டில், எது காலத்தால் முற்பட்டது என்பதை அறிய அந்நூல்களில் சான்று ஏதும் இல்லை.

*மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனார் பாடிய பிறகே, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்பர் ஆய்வறிஞர். எனவே, கால அடிப்படையில் மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, குணடலகேசி என வரிசைப்படுத்துவதே முறை.*

## ஒரு வரலாற்றுப் பார்வை

ஆய்வறிஞர்கள் பலரும், ஐம்பெருங்காப்பியங்களின் காலத்தை, கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி 7 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோற்றங் கொண்டனவாகவே உறுதி செய்கின்றனர். இந்து மத



www.saivamonline.com

உட்சமயங்கள் வழிபாட்டுச் சமயங்களாகத் திகழ்ந்த காலத்தில், வடநாட்டில் அடுத்தடுத்துத் தோற்றம் கொண்ட சமணமும், பௌத்தமும் தென் தமிழ் நாட்டில் பரவின. தனிப்பாடல் நெறியில் நடையிட்டு வந்து தமிழ் இலக்கியப் போக்கில், கதை பொதி காப்பியங்களைப் படைத்து, சமண-பௌத்த நூலாசிரியர்கள், தமிழ் மக்களின் கவனத்தைத் தங்கள்பால் ஈர்க்க முயன்ற முயற்சியின் வெளிப்பாடுகளே ஐம்பெருங்காப்பியங்கள் என்பதில் தவறேதும் இல்லை. என்றாலும், தம் சமயத்தின் மீது பற்றுறுதி கொண்டிருந்த அக்காலத் தமிழ் மக்கள், கதை கேட்கும் நாட்டத்தில் இந்நூல்களைப் பயின்று மகிழ்ந்து வந்தனர் என்பதைப் பெரியபுராணத் தோற்றம் பற்றி வழங்கும் சேக்கிழார் புராணத்தால் அறியலாம்.

## காலத்தின் கட்டாயம்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் காலத்தில், சமண, பௌத்த மதங்கள் ஆதிக்க உணர்வுடன், வைதிக சமயங்களோடு முரண்பட்டு மோதவும் செய்தன. அவைதாமும், தமக்குள் பூசலிட்டுக் கொண்டன. இவை, ஆதிக்கச் சமயங்களாக உருப்பெறாத, மெல்லத் தமிழகத்தில் கால் ஊன்றத் தொடங்கிய காலப் பகுதியில், ஐம்பெருங்காப்பியங்கள் தோற்றம் கொண்டிருக்க வேண்டும். தமிழக மக்களும், ஆட்சியாளர்களும், வைதிக மதங்களில் ஊன்றி நின்ற காலம் என்பதால், ஐம்பெருங்காப்பியங்கள், வைதிக மதங்களை இழித்துரைக்கவோ, தூற்றவோ செய்யாது, அவற்றைத் தழுவியே கதை நடத்தும் கட்டாயத்தில் இருந்தன என்பதை அறியமுடிகிறது. எனவே, ஐம்பெருங்காப்பிங்கள் தாம் பற்றி நின்ற மதங்களால், வைதிக சமயங்களோடு மாறுபட்டிருந்தாலும், தமிழகத்தின் மக்கள் சமயமாக, வைதிக சமயங்கள் பெருஞ்சிறப்புற்றுத் திகழ்ந்தமையால் அவற்றைக் கண்டிக்கவோ இழித்துரைக்கவோ முயன்றிடவில்லை என்பது தெளிவு. மாறாகப் பல விடங்களில் வைதிக சமயக் கோட்பாடுகளைப் பதிவு செய்வதோடு, இச்சமயங்களின் கடவுளர்களை ஏற்றுப் போற்றவும் இவை முன்வந்தன.

## காப்பியக் கொடை

ஐம்பெரும் காப்பியங்களின் தோற்றத்தால், வைதிக சமயங்கள் அணிபெறலாயின. கி.பி. 7 ஆம் நூற்றாண்டு தொடங்கி, சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் இந்து சமயத்திற்கு மாபெரும் ஏற்றம் தந்தனர். இவர்கள் வருகைக்கு முன்னரே, வைதிக


www.saivamonline.com

மதங்களில் சிறந்திலங்கிய சைவம், வைணவம், சாக்தம்,கௌமாரம் முதலிய சமயங்களையும், இவை சிறப்புச் செய்தன. இவை பதிவு செய்துள்ள அரிய சமயக் குறிப்புக்கள், சங்க நூல்களாகிய பத்துப்பாட்டு மற்றும் எட்டுத் தொகை நூல்களிலும் இடம் பெறாத சிறப்பிற்குரியன. இவை, வைதிக சமயங்களுக்கு ஐம்பெருங்காப்பியங்கள் வழங்கிய அரிய கொடைகளாகக் கருதத்தக்கன. ஏன் எனில், சங்க இலக்கியங்கள் பலவும் அக புறச்சார்புடையனவாக நின்று காதலையும், வீரத்தையுமே விரிவாகப் பேசி நிறைந்தன.

*தமிழக மக்களும், ஆட்சியாளர்களும், வைதிக மதங்களில் ஊன்றி நின்ற காலம் என்பதால், ஐம்பெருங்காப்பியங்கள், வைதிக மதங்களை, இழித்துரைக்கவோ, தூற்றவோ செய்யாது, அவற்றைத் தழுவியே கதை நடத்தும் கட்டாயத்தில் இருந்தன என்பதை அறியமுடிகிறது.*

## காப்பியத் தோற்றத்துக்கு முன்

பத்துப்பாட்டின் முதல் பாடல், நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை. இந்நூல் ஒன்றே, சங்க நூல்களுள் முழுவதும் இறைமை சார்ந்ததாக அமைந்தது. அக்காலத்தே சிறந்திருந்த முருக வழிபாட்டையும், முருகன் தலங்களையும், சிறப்பித்து எழுந்த இந்நூலுள், சிவன், உமை தொடர்பான செய்திகளும் இடம்பெற்றன. சைவ-வைணவ-சாக்த நெறிகளோடு, முருக வழிபாட்டை உறவு முறைகாட்டி, இணைத்து, ஒன்றுபடுத்தும் முதல் முயற்சியும் இதிலே அரும்பி நின்றது. இசைப்பாடல்களாகிய பரிபாடல்களில், முருகன், திருமால், காடுகிழாள் என்னும் கொற்றவை குறித்த, நீண்ட தனிப்பாடல்கள் சில இடம்பெற்றன. சங்க அகப்புற இலக்கியங்களில், சிவன், உமை, திருமால், முருகன், இந்திரன், வருணன், பலதேவன், முதலிய கடவுளர்கள், உவமையாகப் பெரும்பாலும், முன்னிறுத்தப்பட்டனர். இவையாவும், இந்து சமயம் பற்றி வழங்கிய செய்திகளைவிட, ஐம்பெருங்காப்பியங்கள் வழங்கிய செய்திகள் நிறைவாகவும், முழுமையாகவும், கூடுதலாகவும் அமைந்தன.

## ஒப்பாய்வுக்கு உதவுவன

ஐம்பெருங்காப்பியங்களுள், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி மூன்றும் சமணச் சார்புடையன. மணிமேகலையும், குண்டலகேசியும் பௌத்தம் பற்றி எழுந்தன. இவற்றுள், சிந்தாமணியின்



www.saivamonline.com

கதைக்கரு, வடபுல நகரங்களின் மேல் நடையிடுவன. காதைப் பகுதி எதுவும் தென்னாட்டு நிலப்பகுதிகளில் நிகழ்ந்ததாகக் குறிப்புக்கள் இல்லை. சமண சமயப் பெருமை பேசும் நோக்கில் எழுந்த சிந்தாமணியில், இந்து மதத்தைப் போற்றிய பகுதிகளோ, அல்லது, தூற்றிய பகுதிகளோ, குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் இடம் பெற்றில. வளையாபதியிலும் குண்டலகேசியிலும் மிகச் சிலவாய பாடல்களே கிடைத்துள்ளன. அவற்றுள், கதைக் கூறுகளோ, குறிக்கத்தக்க சமயக் கூறுகளோ இடம் பெற்றிருக்கவில்லை. இம்மூன்றையும் விடுத்தால், ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வாய்வுக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய எஞ்சிய இருநூல்கள் மட்டுமே துணையாதல் புலப்படும். கூடுதலாகச் சீவகசிந்தாமணியில் ஒரு சில குறிப்புக்கள் துணைநிற்கும்.

## மணநூல்

கத்திய சிந்தாமணி என்ற வடமொழி நூலைப் பின்பற்றித் தமிழில் திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணியை இயற்றினார் என்பர். இக்கருத்தை மறுப்பாரும் உளர். ஆயினும், இதன் மூல நூல் வடமொழியில் இன்னது என்பதை எவரும் உரைத்திலர். சோழர் குலத்தில் வந்தவர் என்று கருதப்படும் திருத்தக்கதேவர், மதுரையில் தங்கியிருந்த போது, உடன் உறை புலவர்களுள் சிலர், சமணர்களுக்குத் துறவு பாடவருமேயன்றி, காமச்சுவை கெழுமிய காப்பியம் பாட இயலாது என்று பேசியதாகவும், அவர் கூறிய குறையை நீக்கக் கருதி, காமச்சுவை மிக்க இச்சீவகசிந்தாமணியைத் திருத்தக்க தேவர் இயற்றினர் என்றும், ஒரு வரலாறு கூறுகிறது. தாம்பாட விரும்பியதைத் தம் ஆசிரியர் அச்சணந்தி என்பாரிடம் தேவர் கூற, அவர், தம் மாணாக்கர் புலமையை அளந்தறிய, அப்போது, அங்கே எதிர்பட்ட நரி ஒன்றைச் சுட்டிக்காட்டி, நீர், காவியம் பாடுமுன், இந்த நரியைப் பொருளாக வைத்து, ஒரு சிறுநூல் இயற்றிக் காட்டுக என்று பணித்தனர் என்றும், உடன், தேவர், ஆசுகவியாக நரிவிருத்தம் என்ற பெயரில், அரிய, சிறு நூல் ஒன்றை இயற்றியளித்தார் என்றும், அந்நூலின் அருமையுணர்ந்த ஆசிரியர், இனி, நீர், நினைந்த வண்ணம், பெரும் காப்பியம் பாடுக என்று பணித்தார் என்றும், பின்னரே திருத்தக்கதேவர், மணநூல் என்று போற்றப்படும் சீவகன் சரிதம் படைத்தார் என்றும் இந்நூல் எழுந்த வரலாறு பேசப்படுகிறது.

## நரி விருத்தம்

அக்காலத்தே , திருத்தக்கதேவரின் நரிவிருத்தம், பெருவழக்கில்



www.saivamonline.com

இருந்திருப்பது தெரிகிறது. திருப்பாதிரிப்புலியூரில், சமண சங்கத் தலைவராகத் தருமசேனர் என்ற பெயரில் வீற்றிருந்த பின், சிவனருளால், சைவம் சார்ந்த, திருநாவுக்கரசர், நரிவிருத்தத்தை நினைவு கூர்ந்து,

*“எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசனது*
*உருவ ருக்கம தாவது உணர்விலர்*
*அரிய யற்கரி யானைய யர்த்துப் போய்*
*நரிவி ருத்தம தாகுவர் நாடரே”*

என, இந்நூலைப் பதிவு செய்கிறார். இதேபோல், சீவகசிந்தாமணி தொடர்கள் பல திருநாவுக்கரசர் தேவாரத்துள் காணப்படுகின்றன.

## கண்ணன் கதைத் தாக்கம்

சீவகன், பல பெண்களை மணந்து, இறுதியில், துறவு மேற்கொண்டான் என்று மணநூல் என்று சிறப்பிக்கப்படும் சீவகசிந்தாமணி நடையிடுகிறது. இதன் கதைப் போக்கினைக் கூர்ந்து நோக்கினால், திருமால் அவதாரங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படும் கிருஷ்ணாவதாரத் தத்துவத்தோடு, சீவகன் கதை, பொருந்தி வருவது தெரிகிறது. சீவகனைக் கண்ணனாகவும் விசையையைத் தேவகியாகவும், சுதந்தையை யசோதையாகவும், சச்சந்தனை வசுதேவனாகவும், கந்துகனை நந்த கோபனாகவும், கட்டியங்காரனைக் கஞ்சனாகவும், காந்தருவதத்தை முதலிய எண்மரைக் கோபியர்களாகவும் கொண்டு கதை நிகழ்வுகளையும் நோக்கின், சீவகன் கதை கண்ணன் கதையையே அடியொற்றி நடத்தல் காணலாம் என அறிஞர் சிலர் இவ்வாறு ஒப்புமை காட்டி நிற்பர். உலகத்தில், பற்றின்றியே, எல்லாத் தொழிலிலும் ஈடுபட்டு, நல்வாழ்க்கை வாழலாம் என்பதற்குக் கண்ணன் கதை, ஓர் எடுத்துக்காட்டு. கண்ணன், ஆயமகளிர் பலரொடும் காமவிளையாட்டு நிகழ்த்தினான், போர்பல செய்தான், அரசாட்சிச் செய்தான், நண்பர்களுக்கு உதவினான், மன்னுயிர் ஓம்பினான், இத்தனைக்கும் இடையே, அவன், பற்றின்றி, மெய்வாழ்க்கை நடத்தினான். இக்கதை, வடபுலத்தவரை ஈர்த்திருக்கலாம். வடமொழியில், சீவகன் கதை, பிறந்து பின், அது, தமிழில் எழுதப் பட்டிருக்கலாம் என்று கருதுவதில் தவறேதும் இருக்கமுடியாது. இந்து சமயம், ஒரு பேராறு. அது, பலவற்றைத் தான் உள்வாங்கிக் கொள்ளவும், பல கிளைகளைத் தோற்றுவிக்கவும் கூடிய, ஜீவநதியாகவும் திகழவல்லது என்பதை, இவ்வொப்புமை நிறுவிநிற்கிறது.



www.saivamonline.com

*இந்து சமயம், ஒரு பேராறு. அது, பலவற்றைத் தான் உள்வாங்கிக் கொள்ளவும், பல கிளைகளைத் தோற்றுவிக்கவும் கூடிய, ஜீவநதியாகவும் திகழவல்லது என்பதை, இவ்வொப்புமை நிறுவிநிற்கிறது.*

## மொழிக்கொடை

சங்ககாலப் பாவகைகளிலிருந்து, பாவினம் உருப்பெற்றது. அவற்றுள்ளும், கதை பொதி காப்பியம் பாடப் பெரிதும் ஏற்றது, விருத்த யாப்பு என்பதைத் திருத்தக்கதேவர் நிறுவிக்காட்டினார். இது, அவரிடமிருந்து, தமிழ் மொழி பெற்றுக்கொண்ட கொடை. சிந்தாமணியின் சிருங்காரச் சுவையில் கட்டுண்டு மகிழ்ந்த சோழ மன்னன் ஒருவனைச் சேக்கிழார், சைவ நெறியில் ஈர்க்கப் பெரியபுராணத்தை விரித்துரைத்தார் என்பதும், ஒருவகையில் சிந்தாமணி வழங்கிய கொடையாகவே கருதப்படும்.

கண்ணன் கோபியர் ஆடைகளைக் கவர்ந்தமை, அருச்சுனனுக்கும் கண்ணனுக்கும் இடையே நிலவிய நட்பாகிய இதிகாசச் செய்தி, இந்து மதம் போற்றும் கார்த்திகை விளக்கீடு, கலைமகள், திருமகள், மன்மதன் முதலிய வைதிக நெறிசார்ந்த கடவுளர் பற்றிய குறிப்புக்கள், வைதிகர் போற்றும் பார்ப்பனரை முன்னிறுத்தித் தீவலம் வந்து இயற்றப்படும் திருமணமுறை முதலிய பல அரிய குறிப்புக்களைச் சீவகசிந்தாமணி பதிவு செய்து அரண் சேர்க்கிறது. பிற்காலத்தே, இந்நூலைப்பின்பற்றிச் சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்தர நாடகம், சீவந்தர சம்பு முதலிய நூல்கள் தோன்றின. இவை சிந்தாமணி வழங்கிய மொழிக் கொடைகளாகக் கருதத் தக்கன.

*பிற்காலத்தே, இந்நூலைப்பின்பற்றிச் சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்தர நாடகம், சீவந்தர சம்பு முதலிய நூல்கள் தோன்றின. இவை சிந்தாமணி வழங்கிய மொழிக் கொடைகளாகக் கருதத் தக்கன.*

## இந்தியச் சமயங்கள்

ஐம்பெருங்காப்பியங்கள் தோற்றங்கொண்ட காலப் பகுதியில், இந்தியநாடெங்கும் நிலவியிருந்த சமயங்களைப்பற்றி விரிவான



www.saivamonline.com

விளக்கங்களை, சிவஞானமுனிவர், தம் சிவஞானபோத மாபாடிய, அவையடக்கப் பகுதியில் விவரித்துள்ளார். சைவ சித்தாந்தத்திற்கு மாறான சமயங்களாக இவை, அவரால் விரித்துரைக்கப்பட்டாலும், இந்தியத் தத்துவச் சிந்தனையில் நிலவியிருந்த, பல்வேறு மதங்களை அறிந்துகொள்ள இவ்வுரை துணைசெய்கிறது. வேதங்களையும், ஆகமங்களையும் முன்னிறுத்தி, இவற்றை ஏற்றும், புறக்கணித்தும் நிலவிய நாற்கூற்று அறுவகைச் சமயங்களை, இவ்வுரை நமக்கு அறிமுகம் செய்விக்கிறது. இவற்றைப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்கு கூறாக்கி, அவர் விளக்குகின்றார். இவற்றின் விரிவை அருணந்தி சிவாசாரியாரின் சிவஞானசித்தியார் பரபக்கம் மற்றும், உமாபதி சிவாசாரியாரின் சங்கற்ப நிராகரணம் முதலிய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

## இளங்கோவடிகள் சமயம்

அக்காலத்தில் நிலவியிருந்த அறுவகைச் சமயங்களுள் பலவற்றைக் குறித்த பதிவுகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. இளங்கோவடிகள் பெயரில், அடிகள் என்ற சொல் இடம் பெற்றிருப்பது குறித்து, சிலப்பதிகார உரையாசிரியர், இவரைச் சமண சமயத் துறவி என்று குறித்துள்ளார் என்றும், எனினும், இளங்கோவடிகளின் பெற்றோரும், உடன் பிறந்த சேரன் செங்குட்டுவனும் சிவநெறி வழுவாச் சிந்தையர் என்பதற்குச் சிலப்பதிகாரத்திலேயே சான்றுகள் பல இருப்பதாலும், அடிகள் என்ற சொல் இறைவனுக்கும், அவன் அடியார்களுக்கும் உரிய பொதுச்சொல் ஆதலின், அது சமண சமயத் துறவியர்க்கே உரியது என்று சாதித்தல் கூடாது ஆகலானும், இளங்கோவடிகள் சிவபெருமானை,

"*பிறவா யாக்கைப் பெரியோன்*"

என்றும்,

"*உலகுபொதி யுருவத் துயர்ந்தோன்*"

என்றும், அவனை முழுமுதற்பொருளாகவே குறித்துள்ளமையாலும் இளங்கோவடிகள் சைவ சமயத்தினரே என்பது துணிபு என்று ஆய்வாளர்களில் சிலர் கருதுகின்றனர். வழி நடைத்துணைப் பாத்திரமாகப் படைத்துக்கொள்ளப்பட்ட காவுந்தி பாத்திரம் காரணமாகவே சமண சமயக் கொள்கைகள் சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன என, அன்னோர் தம்



www.saivamonline.com

கருத்துக்கு, இவ்வாறு, மேலும், ஆதாரம் காட்டுவர். இளங்கோவடிகள், தம் சிலப்பதிகாரத்தில், இந்து மத இறையவர்களைப் போற்றி நிற்கும் பகுதிகளை, ஊன்றி ஆராய்வாருக்கு, அவர், சமண சமயத்தவராக இருத்தல் இயலாது என்றே எண்ணத் தோன்றும். ஆசிரியர் சமயம் எது என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவினும் எல்லாச் சமயங்களையும் ஒப்ப ஏற்றிப் போற்றும் பெருந்தகவினர் அவர் என்பதில், யாருக்கும் ஐயம் இருத்தல் இயலாது.

*இளங்கோவடிகள், தம் சிலப்பதிகாரத்தில், இந்து மத இறையவர்களைப் போற்றி நிற்கும் பகுதிகளை, ஊன்றி ஆராய்வாருக்கு, அவர், சமண சமயத்தவராக இருத்தல் இயலாது என்றே எண்ணத் தோன்றும். ஆசிரியர் சமயம் எது என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவினும் எல்லாச் சமயங்களையும் ஒப்ப ஏற்றிப் போற்றும் பெருந்தகவினர் அவர் என்பதில், யாருக்கும் ஐயம் இருத்தல் இயலாது.*

## பீடன்று - உண்மை காணல்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூன்றையும் பெரிதாகப் போற்றுவது, வைதிக சமயம். கணவனைப் பிரிந்து துயருற்ற கண்ணகியைப் பூம்புகாரில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டங்களில் நீராடி, மன்மதனைத் தொழுதால், பிரிந்த கணவன் வந்து கூடுவான் என எடுத்துரைத்த பார்ப்பனத் தோழியாகிய தேவந்தி, கண்ணகியை நீராட அழைத்தபோது, அவள்வர மறுத்ததோடு, பீடன்று என்று, ஒரு சொல் கூறி நின்றாள். இங்கே பீடன்று என்பதை நீராட வர மறுத்ததாகக் கொள்ளாது, வைதிக சமயம் போற்றும், நீராடல் போன்ற சடங்குகளைக் கண்ணகி எள்ளி உரைத்ததாகச் சிலர் பொருள் கொண்டு, இளங்கோவடிகளை, வைதிக நெறிக்கு மாறானவர் என்று கூறினர். கடவுள் முன்னேயும், கணவன் குறைகளை எடுத்துரைத்தல், கற்புடை பெண்களுக்குப் பெருமையாகாது என்று கருதியே, கண்ணகி, பீடன்று என்று விடை இறுத்தாள் என்பதே, அப்பாத்திரத்திற்கும், இளங்கோவடிகளுக்கும் பெருமை சேர்ப்பதாக அமையும்.

## காமுறு தெய்வம் கண்டனமா?

இதனைப் போல், இன்னொரு இடத்திலும், இளங்கோவடிகளைக் குறை கூறுவார் சிலர் உளர். காடுகாண்காதையில்



www.saivamonline.com

கோவலன், கண்ணகி, காவுந்தி மூவரும், மதுரை நோக்கிப் பயணம் மேற்கொண்ட போது, மாங்காட்டு மறையோன் என்ற வைணவ மறையவன் எதிர்ப்படுகிறான். அவனிடம், மதுரை செல்வதற்கான நேரிய வழி எது என்று, கோவலன் வினவுகிறான். மாங்காட்டு மறையோன, மூன்று வழிகளைச சுட்டி உரைப்பதோடு, தம் வழிபடுகடவுளாகிய திருமால் பெருமைகளைப் பலபட விரித்துரைக்கிறான். காவுந்தி, இடைமறித்து, தம் சமணசமயப் பெருமை கூறி, காமுறு தெய்வம் கண்டடி பணிய நீ போ: யாங்களும் நீள் நெறிப்படர்குதும் என்று பதில் உரைக்கிறார். இதில், சமணத் துறவியாகிய காவுந்தி, திருமாலை, காமுறு தெய்வம் என்று குறித்ததைக் குறைகூறுவார் உளர். கண்ணன் கோபியர்களோடும் நிகழ்த்திய இன்ப ஆடல்களை, இளங்கோவடிகள், காவுந்தி வாயிலாக இழித்துரைத்ததாகக் கருதுவார், அது பற்றியே திருமாலைக் காமுறு தெய்வம் எனக் குறித்தனர் என்று சாதிப்பர். காவுந்தி, மாடல மறையோனை நலம்புரி கொள்கை நான்மறையாளஎன்று உரிய சிறப்புடன் முன்னிலைப்படுத்துவதாலும் காமுறு தெய்வம் என்பதற்கு ,உன்னால் பெரிதும் விரும்பப்படும் தெய்வம் என்பதே நேரிய பொருள் ஆதலாலும் இளங்கோவடிகளை இங்கே குறைசொல்வார் கூற்றை ஏற்பதற்கு இல்லை.

---

*காவுந்தி, மாடல மறையோனை நலம்புரி கொள்கை நான்மறையாளஎன்று உரிய சிறப்புடன் முன்னிலைப்படுத்துவதாலும் காமுறு தெய்வம் என்பதற்கு ,உன்னால் பெரிதும் விரும்பப்படும் தெய்வம் என்பதே நேரிய பொருள் ஆதலாலும் இளங்கோவடிகளை இங்கே குறைசொல்வார் கூற்றை ஏற்பதற்கு இல்லை.*

---

## இளங்கோவின் சமயப் பொறை

இத்தகு, சிற்சில இடங்களைப் புறந்தள்ளிவிட்டுச் சிலப்பதிகாரத்தை ஆராய்ந்தால், சமயம் சார்ந்த சில பதிவுகளில், இளங்கோவடிகளை, இவர் பரமவைணவராக இருப்பாரோ என்றும் வேறு இடங்களில், அல்லர், இவர், உண்மைச் சைவரே என்றும் ஒரு சிலவிடத்து இவரைச் சாக்த நெறியினர் என்றே சாதிக்கலாம் என்றும் கருதத் தோன்றும். தமிழின் முதல் பெருங்காப்பியம் சமயப் பொறை மிக்கதாய்த் திகழ்வது நமக்குப் பெருமை சேர்ப்பது என்று மட்டும் அல்லாது நாம் கடைப்பிடித்து வாழ வேண்டிய நெறி இதுவே என்று கருதியும் மகிழவேண்டும்.



www.saivamonline.com

## ஊழ்வினைக் கோட்பாடு

எல்லாப் பெருங்காப்பியங்களும் உயரிய பாவிகங்களைக் கொண்டே இலங்குவன. காப்பியப் பண்பை, அது உரைத்து நிற்கும் நீதியைப் பாவிகம் என்று உரைப்பது தகும். சிலப்பதிகாரம், மூன்று உயரிய குறிக்கோளை முன்னிறுத்திப் பாடப்பெற்றது என்பதனை,

*"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்*
*உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூ உம்"*

என வரும் பாயிரவரிகளால் அறியமுடிகிறது. இவற்றுள், மூன்றாவதாகிய, ஊழ்வினைக் கோட்பாடே, நூல் முழுவதும் விரவிக்கிடக்கக் காண்கிறோம். கடவுளை ஏற்காத சமணம், ஊழையே முதன்மையாக முன்னிறுத்துகிறது. ஊழ் என்பது, ஓர் அறிவற்ற ஜடம். அது, தானே சென்று உயிர்களைப் பற்றி நின்று இன்பத் துன்பங்களை விளைக்கும் ஆற்றல் இல்லாதது. எனவே, கூட்டுவிப்பான் ஒருவன் வேண்டும். அவனே இறைவன் என்பது வைதிகர் கோட்பாடு. என்றாலும், வைதிக மதங்கள் வினைக் கோட்பாட்டை ஏற்றுப் போற்றத் தவறவில்லை. யாதும் ஊரே என்று தொடங்கும் கணியன் பூங்குன்றனின் புறப்பாட்டு விதிக் கோட்பாட்டின் முடிமணியாகத் திகழ்வது. திருமந்திரம் முதலிய சைவ நூல்களும், சாத்திரங்களும், வினைக்கோட்பாட்டைப் பெரிதும் ஏற்றுப் போற்றுவன. இவ்வகையில், சிலம்பின் பாவிகம் வைதிக சமயத்திற்கு வைதிக மதங்களுக்கு அரண் சேர்ப்பதாகவே அமைகிறது.

## இந்து மதத்தில் பெண்கள்

நடுவணதாகிய உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் என்பது, கண்ணகி தெய்வத்திற்குச் சேரன் செங்குட்டுவன் கோட்டம் அமைத்து வழிபட்ட சிறப்பு நோக்கி நிற்பது. சமணம், பெண்களுக்கு வழங்கும் உரிமைகள், மிகச் சிலவே. பெண்களே காமத்திற்குக் காரணமானவர், பெண் இன்பம் வெறுத்துத் துறப்பதே ஈடேற்றத்திற்கு வாயில். பெண், துறவுக்கும், வீடு பேற்றிற்கும், உரியவள் அல்லள். அவள், வீடுபெற விழைந்தால், மறுபிறப்பில் ஆணாகப் பிறந்தே, அதனைப் பெற இயலும் என்றெல்லாம், சமணம் பெண்மைக்குக் கட்டுப்பாடுகள் பலவற்றை விதித்து, அவர்களை ஒடுக்கும். மாதொரு பாகனாக இறைவனைப் போற்றுவதும், பெண்ணின் நல்லாளொடும்



www.saivamonline.com

பெருந்தகை இருந்ததே என வினவி மகிழ்வதும், தாய்த் தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடும், இல்லுறை தெய்வமாக மங்கலப் பெண்களைப் போற்றுவதும், வைதிக சமயங்களுக்கே உரிய, சிறப்பியல்புகள். கண்ணகி, இப்பிறப்பிலேயே வானவர் உலகம் புக்கதும், அவள் திருமேனிக்கு, இமயநெற்றியில் கல் எடுக்கப்பட்டு வஞ்சியில் கோட்டம் அமைக்கப் பட்டதும், கண்ணகி வழிபாடே மாரித் தெய்வ வழிபாடாக மலர்ந்தது என்ற, கீழை நாட்டார் நம்பிக்கைகளும் சமணக்கோட்பாடுகளுக்கு ஒவ்வாதன. அதே நேரத்தில், அவை இந்து மதக் கோட்பாடுகளுக்கு அணிசெய்து நிற்பன.

***கண்ணகி, இப்பிறப்பிலேயே வானவர் உலகம் புக்கதும், அவள் திருமேனிக்கு, இமயநெற்றியில் கல் எடுக்கப்பட்டு வஞ்சியில் கோட்டம் அமைக்கப் பட்டதும், கண்ணகி வழிபாடே மாரித் தெய்வ வழிபாடாக மலர்ந்தது என்ற, கீழை நாட்டார் நம்பிக்கைகளும் சமணக்கோட்பாடுகளுக்கு ஒவ்வாதன. அதே நேரத்தில், அவை, இந்து மதக் கோட்பாடுகளுக்கு அணிசெய்து நிற்பன.***

## பொது அறம்

சிலம்பு எடுத்துரைக்கும் முதல் குறிக்கோள், அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்பது. இது வள்ளுவர் முதலிய அற நெறியாளர்களும் ஏற்றுப் போற்றியது. அறநெறிபோற்றும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது. எனவே, இதனை வைதிக நெறியோடு தனியே இணைத்து, ஆராய வேண்டிய அவசியம் எழவில்லை. இதேபோல், மங்கல வாழ்த்தின் முன்னிற்கும், திங்கள், ஞாயிறு, மாமழை வாழ்த்துக்களும், எல்லார்க்கும் பொதுவானவை. முன்னிரண்டினையும் கோள்களாகக் கருதாது, கடவுளர்களாகக் கருதினால் சௌமியம் (சந்திரனை வழிபடும்நெறி) சௌரம் (சூரியனை வழிபடும் நெறி), ஆகியன சிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதி மகிழவும் முடியும்.

## கண்ணகி, கோவலன் எழில்

கண்ணகியை, முதன்முதலாக அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள், அவள் அழகை, திருமகள் அழகிற்கும், அவள் கற்பினை, அருந்ததி கற்பிற்கும், ஒப்புமை காட்டிக் கதை நடத்துகிறார். திருமாலின் திருமார்பில் உறையும் திருமகள், நமது இந்து தர்மத்தில்,



www.saivamonline.com

செல்வ நாயகியாக மட்டுமன்றி, அழகின் இருப்பிடமாகவும் போற்றப்பெறுகிறாள். அருந்ததியைத் தம் கற்பின் உயர்வினால், வானத்து விண்மீன்களில் ஒருத்தியாகச் சிறந்தவள் என்று வைதிக புராணங்கள் போற்றி நிற்கும். இவற்றைப் போல், கோவலனை அறிமுகம் செய்யுமிடத்து, அவனை, செவ்வேளாகிய முருகனோடு அழகிற்கு ஒப்புமை கூறி மகிழ்கிறார் ஆசிரியர். குறிஞ்சிநிலத் தெய்வமாகத் தொல்காப்பியத்திலும், இருதேவியர்க்கு அருள்பவனாகப் பரிபாடலிலும், நினைத்ததை முடிக்கும் ஆற்றல் மிக்கவனாகப் புறநானூற்றிலும் குறிக்கப்பட்ட செவ்வேளை, இளங்கோவடிகள், அழகிற்கும் அவனே என்று மேலும் அணிசெய்து மகிழ்கிறார். பின்னர், இருபெண்களோடு, கோவலன் உறவுகொள்ளப் போகிறான் என்பது கருதி, முருகனோடு, அவனை உவமித்தார் என்பார் கூற்று, குறைபாடு உடையது. குற்றமாகவும் தங்கும்.

## நாளும் கோளும்

தென்னாட்டுச் சான்றோர்களின் அருட்கொடையாகக் கருதத்தக்கன நமது ஆகமங்கள். இவை, இறைவனால் அருளிச் செய்யப்பட்டன என்பது மரபு. நாள்கள் மற்றும் கோள்கள் முதலியவற்றின் விளைவுகளை, விளக்கியுரைக்கும் பகுதிகள் ஆகமங்களில் இடம் பெற்றுள்ளன. திங்களும் உரோகிணியும் ஒன்று சேர்ந்த நாளில் கோவலன் கண்ணகி திருமணம் நிகழ்ந்ததாகக் குறிப்பது நமது முன்னோர் வகுத்த சோதிடக்கலைக்கு அரண் சேர்ப்பதாக அமைகிறது. இச்செய்தி அகநானூற்றுள்ளும் காணப்படுகிறது.

*தென்னாட்டுச் சான்றோர்களின் அருட்கொடையாகக் கருதத்தக்கன நமது ஆகமங்கள். இவை, இறைவனால் அருளிச் செய்யப்பட்டன என்பது மரபு. நாள்கள் மற்றும் கோள்கள் முதலியவற்றின் விளைவுகளை, விளக்கியுரைக்கும் பகுதிகள் ஆகமங்களில் இடம் பெற்றுள்ளன.*

## வைதிகத் திருமணம்

சங்க நூல்களுள், வைதிகத் திருமணங்கள் பேசப்படவில்லை. புரோகிதரை முன்னிறுத்தி மணமக்கள் தீயை வலம் வந்து, மணம் கொண்டனர் என்ற முதற் குறிப்பைச் சிலப்பதிகாரமே பதிவு செய்கிறது. தொல்காப்பியம், கற்பியலில் விரித்துரைக்கும் கரணம் என்ற



www.saivamonline.com

சொல்லுக்கு, உரிய பொருள் இன்னது என்பது, இளங்கோவடிகள் வாக்கால் இங்கே விளங்கி நிற்கிறது. வேதமந்திரம் ஓதப்பட்டமை, வயது முதிர்ந்த பார்ப்பனர் ஒருவர் மணச் சடங்குகள் நிகழ்த்தியமை, தீ வளர்க்கப்பட்டமை, மணமக்கள் தீயை வலம் வந்தமை முதலியவற்றைப் பதிவு செய்த சிலப்பதிகாரம், மங்கல நாண் பூட்டப்பட்டதாகப் பதிவு செய்திலது. அக்காலத்து, இவ்வழக்கம் இல்லைபோலும்.

*சங்க நூல்களுள், வைதிகத் திருமணங்கள் பேசப்படவில்லை. புரோகிதரை முன்னிறுத்தி மணமக்கள் தீயை வலம் வந்து, மணம் கொண்டனர் என்ற, முதற் குறிப்பைச் சிலப்பதிகாரமே பதிவு செய்கிறது.*

## இளங்கோவின் அன்புள்ளம்

இந்து மதம் போற்றும் இறையவர்கள், இந்து மதத் தத்துவங்கள் முதலியவற்றைத் தம் காப்பியத்தில், இடம் அமையும்போதெல்லாம், அழகுறப் பதிவு செய்வதில் இளங்கோவடிகள் உண்மையாக மகிழ்ச்சியடைந்திருப்பதை அறியமுடிகிறது. அவரது உயர்ந்த, தூய, சமய

*யாரையும் மகிழ்விக்க வேண்டும் என்ற, கடமையின் வெளிப்பாடுகளோ, ஏனோதானோ என்று இடம்பெறச் செய்தல் போதும் என்ற, போலித்தனங்களோ, ஆசிரியரிடம், கிஞ்சித்தும் இல்லை. இது, வைதிக மதத்திற்குக் கிடைத்த, நற்பேறாகவே கருதப்படவேண்டும். ஏன் எனில், இப்பதிவுகளில் பல, தமிழ் நாட்டுச் சமய வரலாற்றின், முதல் அடையாளங்களாக அமைந்து பெருமை செய்பவை.*

வேற்றுமை பாராட்டாத அன்புள்ளத்தைக் காப்பியம் எடுத்துக் காட்டத் தவறவில்லை. யாரையும் மகிழ்விக்க வேண்டும் என்ற கடமையின் வெளிப்பாடுகளோ, ஏனோதானோ என்று இடம்பெறச் செய்தல் போதும் என்ற போலித்தனங்களோ, ஆசிரியரிடம் கிஞ்சித்தும் இல்லை. இது, வைதிக மதத்திற்குக் கிடைத்த நற்பேறாகவே கருதப்படவேண்டும். ஏன் எனில், இப்பதிவுகளில் பல, தமிழ் நாட்டுச் சமய வரலாற்றின் முதல் அடையாளங்களாக அமைந்து பெருமை செய்பவை. சமூகம் சார்ந்த சங்க இலக்கியங்கள், வைதிக சமயங்களுக்கு வழங்கிய சமயக் கொடையை விட, சிலப்பதிகாரம் வழங்கியிருப்பவை பன்மடங்கு கூடுதலானவை



www.saivamonline.com

என்பது மட்டுமன்றி முழுமை நிறைந்தவையும் ஆகும்.

திருமணத்திற்குப்பின், பெற்றோர் கட்டிலேற்ற, கண்ணகியும் கோவலனும், பூம்புகாரில் அமைந்திருந்த எழுநிலை மாடத்தின் இடைநிலை மாடத்தில் மகிழ்ந்திருந்தனர். அக்காலை, கோவலன் கண்ணகியின் பேரெழில்களை வருணித்து மகிழ்கிறான். காமம் சார்ந்த கலவிக்களத்தில்கூட, சமய உண்மைகளை அளவோடு நினைவூட்டி, மகிழ்விக்க முடியும் என்பதை, இளங்கோவடிகள் மனையறம் படுத்த காதையில் முன்னிறுத்திக் காட்டுகிறார்.

## கண்ணகிக்குக் கடவுள் அளித்த கொடைகள்

சிவபெருமான், தம் திருமுடிமீது மூன்றாம்பிறையை அழகுற முடித்துள்ளான். இப்பிறை, முனிவர்களால் ஏத்திப்பரவப்படும் பெருமை மிக்கது. பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கடைந்த போது, அதிலிருந்து திங்களும் திருமகளும் தோன்றினர் என்பது புராண வழக்கு. கண்ணகியே பாற்கடலில் தோன்றிய திருமகள் என்பதால், சிவபெருமான், அவளுடன் பிறந்த பிறைச் சந்திரனை, அவளுக்கு அளிப்பது முறை என்று கருதி அதனை வழங்க, அதுவே, கண்ணகியின் நெற்றியாக அமைந்தது என்று இளங்கோவடிகள் அற்புதமான சமயக் கற்பனை ஒன்றைப் படைத்து நம் கண்முன் நிறுத்துகிறார்.

*"குழவித் திங்கள் இமையவர் ஏத்த*
*அழகொடு முடித்த அருமைத் தாயினும்*
*உரிதின் நின்னொடு உடன்பிறப்பு உண்மையின்*
*பெரியோன் தருக திருநுதல் ஆகென"*

என்பன இவ்வொப்புமை அமைந்த காப்பியவரிகள். இதேபோல், படைவீரர்களுக்குப் படைக்கலம் வழங்கும் மன்னன்போல், ஆடவர்களை, காமத் தடத்தில் வீழ்த்தப் புறப்பட்ட மன்மதனின் படைவீரர்களாகிய பெண்களுக்கு, மன்மதன் படைக்கருவிகள் வழங்குதல் உண்டு. அவன், தன் கரும்பு வில்லை இரண்டாக உடைத்துக் கண்ணகிக்கு இரு புருவங்களாக வழங்கியுள்ளான் என்கிறார் ஆசிரியர். இதேபோல் இந்திரன் வச்சிரம் போல், நடுப்பகுதி சிறுத்த இடையைக் கண்ணகிக்கு வழங்கினான். முருகனோ, யாதொன்றையும் வழங்கும் கடப்பாடு இல்லாதிருந்திருந்தும், கோவலனை வீழ்த்த வேண்டியே, தம் ஒரு பெரு வேலைக் கண்ணகிக்கு இரண்டு கூரிய கண்களாக வழங்கினன் போலும், என்றெல்லாம் வரும் அற்புத கற்பனைகளில், வைதிக சமயக் கூறுகள் இழையோடுவது நம்மை மகிழ வைக்கிறது.



www.saivamonline.com

## ஆகமக் கிரியைகள்

இந்திரவிழவூர் எடுத்த காதையில், இளங்கோவடிகள், பூம்புகாரில் அக்காலத்தில் நிகழ்ந்த இந்திரவிழாச் சிறப்பினைப் பலபடப் புனைகிறார். மருத நிலத் தெய்வமாக, இந்திரனைப் போற்றுவது வைதிக நெறி. தொல்காப்பியமும், வேந்தன்மேய தீம்புனல் உலகமும் என்று இந்திரனை மருதத் தலைவனாகக் குறிக்கிறது. வேதங்களில், இந்திரனுக்குப் பெரிய இடம் தரப்பட்டுள்ளது. மார்கழி நிறைவு நாளில், வைதிகப் பெருமக்கள் சிறப்பாகக் கொண்டாடும் போகிப் பண்டிகை இந்திரனை நோக்கி எடுக்கப்படுவதேயாகும். அளவற்ற, வானுலக, அரச இன்பத்தைத் துய்ப்பவன் என்ற கருத்தில் இந்திரனைப் போகி என்று அழைப்பது மரபு. உரைசால் மன்னன் கொற்றம் கொள்க என வாழ்த்தி ஆயிரத்து எட்டுப் பொற்குடங்களில், காவிரிப் புனித நீரைக் கொண்டு வந்து நிலவுலகத்தார் மருட்சிகொள்ளவும், விண்ணகத்தார் மகிழவும், விண்ணவர் தலைவனாகிய இந்திரன் நீராட்டப்பட்டான் என்று குறிக்கப்பட்டுள்ளது. புண்ணிய நீரைக் கலசங்களில் முகந்து, வேத மந்திரங்களை உச்சாடனம் செய்து, அந்நீரை இறைவர் திருமேனியில் அபிடேகித்தல் ஆகமங்கள் எடுத்துரைக்கம் வைதிக மரபு ஆகும். இதனை,

"*உரைசால் மன்னன் கொற்றம் கொள்க*" என

"*மாயிறு ஞாலத்து மன்னுயிர் காக்கும்*
*ஆயிரத்து ஓரெட்டு அரசுதலைக் கொண்ட*
*தண்ணருங் காவிரி தாதுமலி பெருந்துறை*
*புண்ணிய நல்நீர் பொற்குடத்து ஏந்தி*
*மண்ணகம் மருள வானகம் வியப்ப*
*விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி*"

எனச் சிலப்பதிகாரம் பதிவு செய்து வழங்குகிறது.

## கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆலயங்கள்

இந்திரவிழாவின் தொடர்பாக, அக்காலத்தே, பூம்புகாரில் சிறந்திருந்த, பல்வேறு இறையவர் திருக்கோயில்களிலும், சிறப்பான வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பூம்புகாரில் கி.பி.2 ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் சிவன், முருகன், பலதேவன், திருமால் மற்றும் இந்திரன் முதலியோருக்குத் தனித்தனியே கோயில்கள் இருந்தமை, சிலப்பதிகாரத்தால் முதன்முதல் நமக்குத் தெரியவருகிறது.



www.saivamonline.com

*"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்*
*அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*
*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்*
*மாலை வெண்குடை மன்னவர் கோயிலும்"*

பூம்புகாரில் திகழ்ந்திருந்தன என்பதோடு, இவற்றைப் பதிவு செய்யும் போது, அவ்வத் தெய்வங்களுக்கு, இளங்கோவடிகள் தரும் அடை மொழிகள், அவர் பண்பாட்டுக்குச் சான்று கூறி நிற்கின்றன. இங்கெல்லாம் வேத வேள்விகள் நிகழ்த்தப்பட்டு, எரியோம்பி, முதிய அந்தணர்களால் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன என்று ஆசிரியர் வைதிக நெறிச் சடங்குகளைப் பதிவு செய்துள்ளார்.

*"மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ*
*நான்மறை மரபின் தீமுறை ஒருபால்"*

என்ற தொடர் இதனை எடுத்துரைக்கிறது. மேலும், பூம்புகாரில், நால்வகைத் தேவர் - மூவறு கணங்கள், பால்வகை தெரிந்த, பகுதித் தோற்றத்து, வேறுவேறு கடவுளர்கள் கோயில்கொண்டிருந்தனர் என்றும், இந்திரவிழாவை ஒட்டி, இக்கடவுளருக்கும், விழா எடுக்கப்பட்டது என்றும் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

*"நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்*
*பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து*
*வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்"*

என்பது அப்பகுதி. நால்வகைத் தேவர் என்பார் வசுக்கள் எண்மரும், ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், மருத்துவர் இருவரும் என நால்வகைப்பட்ட முப்பத்து மூவர். மூவறு கணங்களாவர்: தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்தியாதரர், நாகர், பூதம், வேதாளம், தாராகணம், ஆகாச வாசிகள், போகபூமியோர் என்னும் பதினெண் பாகுபாட்டினர் என உரையாசிரியர்கள், வேத ஆகமங்களின் துணைக் கொண்டு, மேல்குறித்த பகுதியை விரித்துரைத்துள்ளனர். நால்வகைத்தேவர் மூவறு கணங்கள் என்பனவற்றை வேறுபட விரித்துரைப்பாரும் உண்டு.

சோழமன்னனால், தலைக் கோலரிவை எனப் பாராட்டப்பட்ட மாதவி ஆண்டுக்கு ஒரு முறை, இந்திரவிழாவின் நிறைவு நாளில் பொது



www.saivamonline.com

மக்கள் முன் ஆடும் கடமை உடையவள். அவ்வாறு, அவள் அரங்கேறி ஆடிய ஆடல் காட்சிகளை, ஒரு வித்தியாதரவீரன், வான்வழி, தன் காதலியோடு, பூம்புகார் வந்து கண்டு மகிழ்ந்ததாகக் கதை நடத்தும் இளங்கோவடிகள், மாதவி ஆடிய, பதினொராடல்களை, அவற்றை ஆடியோர், ஆடிய காரணம், கொண்ட கோலம், ஆட்டத்தின் பெயர் என நிரல்படப் பதினொராடல்கள் பற்றிய விரிவான முதற்குறிப்புக்களை நமக்கு வழங்குகிறார்.

*இளங்கோவடிகள், மாதவி ஆடிய, பதினொராடல்களை, அவற்றை ஆடியோர், ஆடிய காரணம், கொண்ட கோலம், ஆட்டத்தின் பெயர் என நிரல்படப் பதினொராடல்கள் பற்றிய விரிவான முதற்குறிப்புக்களை நமக்கு வழங்குகிறார்.*

## தேவபாணி

பதினொராடலை அறிமுகப்படுத்தும் முன்னாக, இவ்வாடல்கள் தொடங்கப்படுவதற்கு முன்னாகப் பாடப்படும் தேவபாணி பற்றி ஆசிரியர் விரித்துரைக்கிறார். தெய்வத்தைப் பரவும் இசைப்பாடல்கள் தேவபாணி எனப்பட்டன.

*"மாயோன் பாணியும் வருணப் பூதர்*
*நால்வகைப் பாணியும், நலம் பெறு கொள்கை*
*வானூர் மதியமும் பாடி"*

என்பதில், மாயோன் பாணி என்பது, திருமாலைப்பரவும் தேவபாணியாகும். இதைப்போல், வருணபூதர் நால்வரைத் தனித்தனியே பரவும் தேவபாணிகள் நான்கு உண்டு. வான்மதியைப்பரவும் தேவபாணி எனவும் ஒன்று உள்ளது. இவை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி என, ஒவ்வொன்றும் இருவகைப்படும். இத்தேவபாணிகள், நாடகத் தமிழில் வரும்போது, பல தேவரும், வருணப் பூதரும், அவரணியும் தாரும், ஆடையும், நிறனும், கொடியும், அவராற் பெற வேண்டுவனவும் கூறப்படும் எனப் பண்டை இசைத் தமிழ் மற்றும் நாடக நூல்களுள் கூறப்பட்டுள்ளன. வைதிக சமயங்கள் போற்றி வளர்த்த இசை நாடகத் திறங்களைச் சிலப்பதிகாரம் முதன்முதலாக எடுத்துக்காட்டி இந்து சமயங்களுக்குப் பெருமை சேர்க்கிறது.



www.saivamonline.com

## பதினொராடல்கள்

மாதவி ஆடிய பதினொராடல் பற்றிய குறிப்புக்கள், சங்ககாலத்தில், வைதிக சமயங்கள் போற்றிக் காத்துவந்த, இசை மற்றும் நாடகக் கூறுகளைப் பறை சாற்றுகின்றன. அவை, முறையே, 1.கொடுகொட்டி, 2. பாண்டரங்கம், 3. அல்லியம், 4. மல், 5.துடி, 6. குடை, 7. குடம், 8. பேடி, 9. மரக்கால், 10 பாவை, 11. கடையம் என்பன.

1. கொடுகொட்டி என்பது, பைரவியாகிய உமை (பாரதி) நட்டமாடிய பாரதியரங்கம் என்ற சுடுகாட்டில், திரிபுரத்தை அழிக்க, அம்பை எய்த, வெற்றிக்களிப்பில், உமையம்மை அருகிருந்து காண, கைகளைக் கொட்டியவாறு, சிவபிரான் ஆடிய ஆடல்.

2. பாண்டரங்கம் என்பது, திரிபுர தகனகாலத்தில், தேர்ச்சாரதியாக நின்ற பிரமன் காண, பாரதி, வெண்ணீறு பூசிநின்று ஆடிய ஆடல்.

***மாதவி ஆடிய பதினொராடல் பற்றிய குறிப்புகள், சங்ககாலத்தில், வைதிக சமயங்கள் போற்றிக் காத்துவந்த, இசை மற்றும் நாடகக் கூறுகளைப் பறை சாற்றுகின்றன. அவை, முறையே, 1.கொடுகொட்டி, 2. பாண்டரங்கம், 3. அல்லியம், 4. மல், 5.துடி, 6. குடை, 7. குடம், 8. பேடி, 9. மரக்கால், 10 பாவை, 11. கடையம் என்பன.***

3. கஞ்சனாகிய மாமனை வெற்றிகொள்ளக் கண்ணன் ஆடிய கூத்துக்கள் பலவற்றுள், கஞ்சன் வஞ்சனையால் ஏவிய யானையின் கொம்பை ஒடிப்பதற்காக ஆடிய ஆடல் அல்லியம் எனப்பட்டது.

4. திருமால், ஒரு மல்லனாக வடிவெடுத்து, அவுணன் ஒருவனுடன் போராடி அவ்வவுணனைக் கொன்றது, மல் என்னும் கூத்து. கொல்லப்பட்ட அவுணன் வாணாசுரன் என்பர் உரைகாரர்.

5. கடல் நடுவுள் நின்று வஞ்சகப் போர்செய்த சூரபதுமனை, முருகப் பெருமான் கொன்றழித்தகாலை ஆடிய கூத்து, துடி எனப்பட்டது.

6. குடை என்பது, தம்மொடு போரிட்டுத் தோற்று, அவுணர்கள் படைக்கலன்களை இழந்து, வருந்திநின்ற போது தன் குடையை, அவர் முன்னே சாய்த்து முருகப் பெருமான் ஆடியது.

7. குடம் என்பது வாணாசுரன் என்பான், காத்து வந்தஅவனது சோ என்னும் நகர வீதியிற் சென்று, நெடியவனாகிய திருமால், குடம்



www.saivamonline.com

கைக்கொண்டு ஆடியது. இது விநோதக்கூத்து ஆறனுள் ஒன்று. வாணனால் சிறை வைக்கப்பட்ட காமன் மகன் அநிருத்தனைச் சிறை மீட்கும் கால், திருமால் இக்கூத்தை இயற்றினார் என்பர்.

8. பேடி என்பது ஆண்மை திரிந்த பெண்மைக் கோலமாகிய பேடியுருக்கொண்டு, மன்மதன் ஆடியது.

9. மரக்கால் என்பது அவுணர் கொடுஞ்செயல்களைப் பொறாது, வெகுண்டெழுந்து, கொற்றவை மரத்தால் ஆகிய கால்மேல் நின்று ஆடியது.

10. திருமகள், கொல்லிப்பாவை வடிவம் கொண்டு, போர்க்கோலத்தோடிருந்தும், போர்செய்யாது, மோகித்த அவுணர்கள், போர்க்கோலம் ஒழிய ஆடியது, பாவை கூத்து எனப்படும்.

11. சோ என்னும் நகரத்தின் வடக்கு வாயிற்கண், வயலிடத்தில் நின்று, இந்திராணி, கடைசியர் (மருத நிலத்துப் பெண்) வடிவங்கொண்டு, ஆடியது கடையம் எனப்பட்டது.

இப்பதினொராடல்களை ஆசிரியர் இளங்கோவடிகள் பதிவு செய்வதன் மூலம், அக்காலத்தே வைதிக சமயத்தார், போற்றிய, இறையவர்கள் நிகழ்த்திய, வீரச் செயல்களை நாம் அறிந்து பெருமை கொள்ள முடிகிறது.

## வரலாற்றுப் பதிவுகள்

ஏதேனும் ஒன்றை, எய்த விரும்பி, பல்வேறு திருக்கோயில்களுக்குச் சென்று, நீராடி, வலம்வந்து, இறைவன் முன், தம் வேண்டுகோள்களை முன்வைத்து, வழிபடுதல், வைதிக மதங்களைப் பற்றி நிற்பார் வழக்கு. அக்காலத்து, பல கோயில்களுக்கும் சென்று வேண்டுகோள்களை முன் வைத்துப் பாடுகிடத்தல் நிலவியது என்பதைக் கனாத்திறம் உரைத்த காதையில், மாலதி என்பாள் வரலாறு கூறுமிடத்து, இளங்கோவடிகள் பதிவு செய்கிறார். அவள், இறந்துபோன தன் மாற்றாள் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை வழங்கவேண்டி, அக்குழந்தையைக் கையில் ஏந்தியவாறு எவ்வெக் கோயில்களுக்குச் சென்றுவழிபட்டாள் என்பதை விரிக்குமிடத்து,

*"அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்*
*புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம், பகல் வாயில்*



www.saivamonline.com

*உச்சிக் கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேல்கோட்டம்*
*வச்சிரக் கோட்டம், புறம்பனையான் வாழ்கோட்டம்*
*நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம்..... புக்கு”*

என்றெல்லாம், பூம்புகாரில் நிலவியிருந்த, கோட்டங்கள் பலவற்றையும், நம் கண்முன் நிறுத்தி இளங்கோவடிகள் ஒரு வரலாற்றுப் பதிவைச் செய்து வைக்கிறார்.

## கோயில் : கோட்டம் : விளக்கம்

இவற்றால், கற்பகத் தருவிற்கும், வெள்ளையானையாகிய ஐராவதத்திற்கும், பலதேவருக்கும், சூரியனுக்கும், சிவபெருமான் எழுந்தருளும் கயிலாயத்திற்கும், முருகவேளின் வேலாயுதத்திற்கும், இந்திரன் ஆயுதமாகிய வச்சிரத்திற்கும், சாதவாகனன் என்பானுக்கும், அருகனுக்கும், சந்திரனுக்கும் தனித்தனியே சிறு ஆலயங்கள், அக்காலத்தே அமைந்திருந்தமை புலனாகிறது. இவற்றுள், ஒன்றேனும், இன்று, பூம்புகாரில் இல்லாமை, நம் தவக்குறைவே. பிற்காலத்தே, காஞ்சியும், அதன்பின்னால் குடந்தையும், நிறைந்த கோயில் நகரங்களாக உருவாவதற்குப்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பல்வேறு மதங்கள், சமயங்கள், இறையவர்களின் பெருங்கோயில்கள், சிறு கோயில்கள் நிறைந்த, மாபெரும் கோயில் நகரமாகச் சோழர் தலைநகர் பூம்புகார், சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தமை, நம்மை விம்மிதமுறச் செய்கிறது. பெருந்தெய்வங்களுக்குக் கிழக்கு, மேற்கு முதலிய நேர் திசைகளில், வாயில் அமைத்தும், ஏனைய கடவுளர்க்கு, வடகிழக்கு, தென்மேற்கு முதலிய, கோணத் திசைகளில் வாயில் அமைத்தும் ஆலயம் எடுக்கும் வழக்கம் உண்டென்றும், நேர்த் திசைகளில் அமைந்தனவற்றைக் கோயில்கள் என்றும், கோணத்திசைகளில் அமைந்தனவற்றைக் கோட்டங்கள் என்றும் வழங்குதல் மரபென்றும் அறிஞர் கூறுவர். காமக்கோட்டம், குமரக் கோட்டம், கந்த கோட்டம் என்பன, இவ்வாறு அமைந்திருத்தல் நோக்கதக்கது.

## திருவரங்கம் : திருவேங்கடம்

கோவலனும், கண்ணகியும், காவுந்தி என்ற சமணப் பெண் துறவியை, வழித்துணையாகக் கொண்டு, காவிரி வடகரையில், பன்னாள் பயணம் மேற்கொண்டு ஆற்றிடைக்குறையாகிய திருவரங்கத்தை அடைந்து, சாரணரை வழிபட்டு, அவர் கூறிய அறிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்து, காவிரியைக் கடந்து, உறையூர் சேர்கின்றனர். பின்னர்,



www.saivamonline.com

மூவரும், தென்திசை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும்போது ஒரு சோலையில், முதிய, வைணவ அந்தணாளன், மாங்காட்டுமறையோனைச் சந்திக்கின்றான் கோவலன் மாங்காட்டுமறையோனை, யாது நும் ஊர்? ஈங்கு என் வரவு, என்று வினாவுகிறான். அக்காலை, மாங்காட்டு மறையோன் கூற்றாகத் திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தையும், திருவேங்கடத்தில் அவனது நின்ற கோலத்தையும் இளங்கோவடிகள் எடுத்துரைக்கும் பகுதிகள் நம்மைப் பரவசப்படுத்துவன.

*"நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்*
*பால் விரிந்து அகலாது படிந்தது போல*
*ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்*
*பாயற் பள்ளி பலர்தொழு தேத்த*
*விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தித்*
*திருவளர் மார்பன் கிடந்த வண்ணமும்"*

காண விரும்பியும்,

*"வீங்குநீர் அருவி வேங்கட மென்னும்*
*ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை*
............ ............... .................
*பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்*
*தகைபெறு தாமரைக் கையி னேந்தி*
*நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு*
*பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய*
*செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"*

கண்டுதொழவும், தான் தலயாத்திரை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கும் பகுதியில், தமிழகத்தின் வைணவப் பெருந்தலமும், வைணவர்களால் கோயில் என்று அழைக்கப்படுவதுமாகிய திருவரங்கத்தின் தொன்மையும், பெருமையும் அறியப்படுவதோடு, இந்தியப் பெருநாடெங்கும் அறியப்பட்ட, திருவேங்கடச் சிறப்பும் அறியப்படுகின்றன. நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் தோற்றம் கொள்வதற்கு, ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, இவ்விருபெரு வைணவத் தலங்களும் புகழ்பெற்று விளங்கியமை புலப்பட்டுத் தோன்றுகின்றன. மொழிமாறாத, தமிழகப் பகுதியாகத் திருவேங்கடம் அக்காலத்தே திகழ்ந்திருந்தமையை, இப்பதிவு உறுதிசெய்வதோடு, வேங்கடத்தில் நின்ற கோலம்கொண்டு திகழ்வோன்



www.saivamonline.com

முருகனே என்பார் கூற்று வெறும் ஆசைபற்றியதே என்பதையும் நிறுவிக்காட்டும் முதற்சான்றாக அமைகிறது.

*பிற்காலத்தே, காஞ்சியும், அதன்பின்னால் குடந்தையும், நிறைந்த கோயில் நகரங்களாக உருவாவதற்குப்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பல்வேறு மதங்கள், சமயங்கள், இறையவர்களின் பெருங்கோயில்கள், சிறு கோயில்கள் நிறைந்த, மாபெரும் கோயில் நகரமாகச் சோழர் தலைநகர் பூம்புகார், சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தமை, நம்மை விம்மிதமுறச் செய்கிறது.*

*நேர்த் திசைகளில் அமைந்தனவற்றைக் கோயில்கள் என்றும், கோணத்திசைகளில் அமைந்தனவற்றைக் கோட்டங்கள் என்றும் வழங்குதல் மரபென்றும் அறிஞர் கூறுவர். காமக்கோட்டம், குமரக் கோட்டம், கந்த கோட்டம் என்பன, இவ்வாறு அமைந்திருத்தல் நோக்கதக்கது.*

## பௌராணிகப் பதிவுகள்

தொடர்ந்து, மாங்காட்டு மறையோன், விரித்துரைக்கும், மதுரை வழித்தடங்கள் பற்றிய பகுதியில், வரலாற்றுச் சிறப்புமிக்க கொடும்பாளூர், பாண்டியர்க்கு உரிய சிறுமலை, இடப்பக்க வழியில் எதிர்ப்படும் திருமால் குன்றம், அதனை அடுத்து அமைந்திருக்கும், விண்ணோர் ஏத்தும் சிறப்புடைய புண்ணியசரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்னும் பெயர்கள் அமைந்த பொய்கைகள், அவற்றில் நீராடுவோர் எய்தும் பெரும் பேறுகள் என்பன பௌராணிக நெறியில் விளங்கித் தோன்றுகின்றன. வியப்பூட்டும் நிகழ்வுகளும், அவை தொடர்பான நம்பிக்கைகளும் மாங்காட்டு மறையோன் கூற்றால் விளங்குகின்றன. ஒரு பெருங்காப்பியத்தை நடத்திச் செல்லும் கவிஞன், அதில் இடம்பெறும் பாத்திரங்களின் உள்ளுணர்வுகளையும், விருப்பங்களையும் சிறிதும், கரவின்றிப் பதிவு செய்யும் கடப்பாடு உடையவன். இந்தக் கடமை உணர்வில் தலை நிற்பவர் இளங்கோவடிகள். பின்வந்தோர் பலரும் தடம்புரண்டனர். சமயப் பூசல்களும், தூற்றல்களும், ஏச்சுரைகளும், நம் தமிழ் மொழி இலக்கியங்களுள் இடம் பெற்றமைக்கு இதுவே காரணம்.



www.saivamonline.com

## மூன்று புதையல்கள்

அறுவகைச் சமயங்களில் இடம்பெற்றுள்ள சாக்தம், வைணவம், கௌமாரம் முதலிய மூன்று பெருநெறிகளை, முழுமையாக விளக்கும், மூன்று அரிய பகுதிகள், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் திறங்கள் தனித்தனியே ஆராயத்தக்க பெருஞ்சிறப்புடைய சாக்தக் கூறுகளை வேட்டுவ வரியும், வைணவக் கூறுகளை ஆய்ச்சியர் குரவையும், கௌமாரக் கூறுகளைக் குன்றக் குரவையும் பேசிக்காட்டும் அழகு, சொல்லில் அடங்காத விரிவும் சுவையும் மிக்கன. அவ்வப்பகுதிகளில், ஆசிரியர் இளங்கோவடிகள், அவ்வத் தெய்வங்களை ஏற்றுப் போற்றும் ஒரு சீரடியாராகவே தம்மை உருவகித்துக்கொண்டு பாடும் திறம், கற்போரை மகிழவைப்பதோடு, ஆசிரியர் மீது, மிகுந்த மரியாதையையும் தோற்றுவிக்கிறது.

---

*மொழிமாறாத, தமிழகப் பகுதியாகத் திருவேங்கடம் அக்காலத்தே திகழ்ந்திருந்தமையை, இப்பதிவு உறுதிசெய்வதோடு, வேங்கடத்தில் நின்ற கோலம்கொண்டு திகழ்வோன் முருகனே என்பார் கூற்று வெறும் ஆசைபற்றியதே என்பதையும் நிறுவிக்காட்டும் முதற்சான்றாக அமைகிறது.*

*ஒரு பெருங்காப்பியத்தை நடத்திச் செல்லும் கவிஞன், அதில் இடம்பெறும் பாத்திரங்களின் உள்ளுணர்வுகளையும், விருப்பங்களையும் சிறிதும், கரவின்றிப் பதிவு செய்யும் கடப்பாடு உடையவன். இந்தக் கடமை உணர்வில் தலை நிற்பவர் இளங்கோவடிகள். பின்வந்தோர் பலரும் தடம்புரண்டனர். சமயப் பூசல்களும், தூற்றல்களும், ஏச்சுரைகளும், நம் தமிழ் மொழி இலக்கியங்களுள் இடம் பெற்றமைக்கு இதுவே காரணம்.*

---

## கண்ணகியின் நாணம்

முதற்கண்ணதாக, வேட்டுவவரி அமைகிறது. மதுரை நோக்கிய வழிநடையில் கோவலன், கண்ணகி, காவுந்தி ஆகிய மூவரும் வெய்யில் கொடுமை காரணமாகப் பயணத்தை இடைநிறுத்திக் கொண்டு, அண்மையில் அமைந்திருந்த ஐயைக் கோட்டத்தை அடைகின்றனர். அக்காலை, அப்பாலை நிலத்தைச் சேர்ந்த, சாலினி என்பாள் மீது,



www.saivamonline.com

கொற்றவை ஆவேசிக்க, அவள், மறக்குடிமக்களுக்கு அறிவுரை கூறித் தெருட்டுகிறாள். அது கேட்ட மறக்குடி மக்கள், குமரி ஒருத்திக்குக் கொற்றவை கோலம் புனைவித்து, வழிபடு பொருள்களுடன், கோவலன் முதலிய மூவரும் தங்கியிருக்கும் ஐயைக் கோட்டத்திற்கு, அப்பெண்ணை அழைத்துக்கொண்டு வருகின்றனர். ஆவேசமுற்ற சாலினி, கண்ணகியைப் பலபடப் புகழ்ந்து பேசுகிறாள். கணவன் முன், தன்னைப் புகழ்ந்தமைக்குக் கண்ணகி நாணுகிறாள். இளங்குமரியின் வரிக்கோலத்திற்குப் பின்னர், ஐயை அருள்புரிகிறாள். வேட்டுவர்கள், அதன்பின், கொற்றவையின் பல பெருமைகளையும் கூறிப் பரவி, ஆடி மகிழ்கின்றனர். இவர்கள் ஆடிப்பாடும் கொற்றவை குறித்த பாடல்கள் பெரிதும் சிறப்புடையன.

## அருள்மொழிகளின் மெய்மை

கொற்றவையைத் தெய்வமாகக் கொண்டு வாழும் பாலைநில மக்கள் மேற்கொண்டு ஒழுகிய நம்பிக்கைகளை ஆசிரியர்,

*"கலையமர் செல்வி கடனுணின் அல்லது*
*சிலையமளர் வென்றி கொடுப்போள் அல்லள்"*

என்று, அந்நிலமக்கள், கொற்றவைக்குப் பலியிடும் பழக்கம் மேற்கொண்டிருந்தமையைப் பதிவு செய்கிறார். தெய்வம், ஆவேச முற்றுக் குறி கூறும் வழக்கம், அக்காலத்தே நிலவியிருந்ததைத் தெய்வத்தன்மை பெற்ற சாலினி கூற்றாக,

***"இவளோ, கொங்கச் செல்வி, குடமலை யாட்டி***
***தென்தமிழ்ப் பாவை : செய்த தவக் கொழுந்து***
***ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய***
***திருமாமணி"***

எனக் குறித்துச் செல்கிறார். கண்ணகியை முன்னிலைப்படுத்தி, சாலினி உரைத்த தெய்வ மொழிகள் யாவும், கண்ணகி வாழ்வில், பின்னர் உண்மையாகின்றன. வைதிக நெறி போற்றும் தெய்வ அருள் மொழிகள், உரிய பயன்களை விளைக்கும் மெய்மை சார்ந்தன என்பதை உறுதி செய்யும் இளங்கோவடிகளின் உயர்பண்பு, அவரை நம் நெஞ்சத்தில் உயர்த்தி நிறுத்துகிறது.

## முன்றிற் சிறப்பு

இப்பகுதியில், கொற்றவையைப் பரவிப் போற்றும் அரிய



www.saivamonline.com

இசைப்பாடல்கள், நிறைவாக இடம்பெறுகின்றன. கொற்றவை எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும், முன்றிற் சிறப்புரைக்கும் பகுதியில்,

*"சேவும் மாவும் செறிந்தன - கண்ணுதல்*
*பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே"*

என்றும்,

*"பொங்கார் வெண்பொறி சிந்தினபுன்கு - இளந்*
*திங்கள் வாழ்சடையாள் திருமுன்றிலே"*

என்றும்,

*"அரவ வண்டு இனம் ஆர்த்து, உடன் யாழ்செயும்*
*திருவ மாற்கு இளையாள் திருமுன்றிலே"*

என்றும் வரும் பகுதிகளில், கொற்றவையும், உமையின் ஒரு கூறுதான் என்பதும், சிவனுக்கு உரிய அடையாளங்கள் யாவும், உமைக்கும் உரியன என்பதும், அவள், செங்கண்மாலின் திருத்தங்கை என்பதும் உறுதி செய்யப்படுகின்றன.

கொற்றவை குறித்த, அற்புத, இசைப் பாடல்களின் முதற் பதிவே, சிலப்பதிகாரத்தில்தான் இடம்பெறுகிறது.

*"ஆனைத்தோல் போர்த்து புலியின் உரிஉடுத்து*
*கானத்து எருமை கருந்தலைமேல் நின்றாயால்*
*வானோர் வணங்க மறைமேல் மறையாகி*
*ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்"*

என்பது முதலாகத் தொடரும் பாடல்கள், அம்மையை, ஞானக் கொழுந்து என்றும் சோதி விளக்கென்றும், மறை ஏத்தும் புகழாள் என்றும் போற்றியுரைக்கின்றன.

---

*வைதிக நெறி போற்றும், தெய்வ அருள் மொழிகள், உரிய பயன்களை விளைக்கும் மெய்மை சார்ந்தன என்பதை, உறுதி செய்யும் இளங்கோவடிகளின் உயர்பண்பு, அவரை நம் நெஞ்சத்தில் உயர்த்தி நிறுத்துகிறது.*

---



www.saivamonline.com

## சைவ-வைணவ ஒருங்கிணைப்பு

சைவ-வைணவ பேதத்தைத் தகர்ப்பவள் அம்மை. அவள், சிவனார் துணைவி, மாயோன் தங்கை. எனவே அவளுக்குக் கொன்றையும் சடையும் உரியன. அவள் அடியார்களும், இது உணர்ந்து, இவ்விரண்டையும், மாலையாகக் கட்டித் தோள் மேல் அணிந்து, அன்று, அம்மை, அசுரர் வாட, அமரர் மகிழ, ஆடிய குமரிக்கூத்தில் ஈடுபடுவதாக, இளங்கோவடிகள், சைவ-வைணவ ஒருங்கிணைப்பைக் கொற்றவையை முன்னிறுத்தி நிறுவுகிறார். இதன் திறம், விரிப்பின் பெருகும். அதன் அழகை, அங்கே கண்டு மகிழ்க.

## கொற்றவை கொண்ட கோலங்கள்

ஒன்றை மட்டும், இங்கே பதிவு செய்தல் பொருத்தமாகும். வழக்குரை காதையில், கண்ணகியின் சினமிக்க உருவம்கண்டு, வாயிற் காவலன் சென்று, பாண்டியன் முன் அவள் வருகை உரைக்குமிடத்துக் கண்ணகியை,

*"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்*
*பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி*
*வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்*
*அறுவர்க்கு இளையநங்கை இறைவனை*
*ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்*
*கானகம் உகந்த காளி, தாருகன்*
*பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்"*

அம்மையின், பல்வேறு கூறுகளுடன் ஒப்பிட்டு, ஒவ்வொன்றாக விளக்கும் பகுதி, அருமைப்பாடுமிக்கது. இங்கே, உமை மேற்கொண்ட, பல்வேறு வீர ஆடல்கள் அழகுறப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மகிடாசுரமர்த்தனியாகிய கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை முதலிய அம்மையின் சினம் மிக்க ஆடல்கள் பதிவு பெற்றுள்ளன. சக்தி பற்றிப் பண்டு நிலவியிருந்த புராணக் கூறுகளை, இப்பகுதி நிறைவாக எடுத்துக்காட்டி நிறைகிறது.

## சங்க நூல்களில் திருமால்

இனி, திருமால் வழிபாடு தொடர்பான சிலப்பதிகாரச் செய்திகளை, வகைப்படுத்திக் காணலாம். மாயோன் மேய காடுறை உலகமும் என்பது தொல்காப்பியம். முல்லை நிலத் தலைவனாகத் திருமால் விளங்குகிறான். சங்க நூல்களில் திருமால் பற்றிய



www.saivamonline.com

சிறுகுறிப்புக்கள் உண்டு. பரிபாடலில், திருமால் குறித்தெழுந்த இசைப்பாடல்கள், அரிய செய்திகள் தருவன. வடபுலத்தே எழுந்த இராமாயணமும், மகாபாரதமும், திருமாலைப் பெரிதும் போற்றி உரைத்தன. சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டுத் தமிழில் இராமாயண மகாபாரத நூல்கள் இருந்தனவா என்பதைத்திடமாக அறிய முடியவில்லை. பாரதம் பாடிய பெருந்தேவனார் என ஒருவர் இருந்ததைச் சங்க நூல் கடவுள் வாழ்த்துக்களால் அறிய முடிகிறது. அவர், சங்க நூல்கள் பிற்காலத்தே தொகுக்கப்பட்ட போது வாழ்ந்தவர் என்பர் அறிஞர். இக்கண்ணோட்டம் கொண்டு காண்கையில், திருமாலின் தசாவதாரச் செய்திகளையும், இதிகாசச் செய்திகளையும் முதன்முதல் விரிவாகப் பதிவுசெய்து, திருமால் நெறியாகிய வைணவத்திற்கு இளங்கோவடிகள் பெருமை சேர்த்திருப்பதை அறிய முடிகிறது.

## இதிகாசப் பதிவுகள்

புறஞ்சேரி இறுத்த காதையில், கோவலனைக் கண்ட கௌசிகன், அவன் பிரிவால் பூம்புகார் மக்கள் எய்திய துயரைக் கூறுமிடத்து, இராமனைப் பிரிந்த அயோத்திபோலப் பூம்புகார் மக்கள், துயரடைந்ததாகத் தெரிவிக்கிறான்.

*“பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்*
*அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த*
*அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்*
*பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்”*

என்ற பதிவில், தசரதன் பெருமகன் எனவும், இராமன் அருந்திறல் என்றும், இளங்கோவடிகளால் குறிக்கப்பட்டுள்ளனர். காட்டில் சீதையைப் பிரிந்து வருந்திய இராமன் துயரை எடுத்துக்காட்டிக் காட்டில் வாழ்ந்தாலும், துணையைப் பிரியாத வாழ்வை, கோவல, நீ பெற்றிருப்பது, மகிழ்ச்சிக்கு உரியதன்றோ எனக் காவுந்தி, கோவலனைத் தெருட்டியதாக இளங்கோவடிகள் இராமாயணச் செய்தி ஒன்றைப் பதிவு செய்கிறார்.

*“தாதை ஏவலின் மாதுடன் போகிக்*
*காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்*
*வேத முதல்வன் பயந்தோன் என்பது*
*நீ அறிந்திலையோ?”*

என்று விரித்துரைத்ததோடு, நளன் தமயந்தியை நடுக்காட்டில் பிரிந்த



www.saivamonline.com

துயரத்தையும் எடுத்துரைக்கிறார்.

## தசாவதாரச் செய்திகள்

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையுள், திருமால் சிறப்புரைக்கும் அரிய பகுதிகள் பல நிறைவாக இடம்பெற்றுள்ளன. திருமால். கன்று குணிலாக் கனியுதிர்த்தது, பாம்பு கயிறாக் கடல் கடைந்தது, கொல்லையம் சாரல் குருந்தொசித்தது, அறுவை ஒளித்தது, கதிர் திகிரியான் மறைத்தது, தாதெரு மன்றத்துக் குரவை யாடியது, கோகுலம் மேய்த்தது, கடல் கடைந்தது, அசோதையார் கடை கயிற்றால் கட்டுண்டது, உலகடைய உண்டது, உறிவெண்ணெய்க் கவர்ந்தது, இரண்டடியான் மூவுலகும் இருள் தீர நடந்தது, பஞ்சவர்க்காகத் தூது சென்றது, தம்பியுடன் கான் போந்தது, சோ அரணம் போர் மடித்தது, தொல் இலங்கை கட்டவிழ்த்தது, முதலாகிய திருமாலின் தசாவதார நிகழ்வுகளை மிக விரிவாகச் சிலப்பதிகாரம் பதிவு செய்து, வைதிக மதத்தவரைப் பரவசப்படுத்துகிறது. இது, வைணவ சமயத்தாருக்கு வாய்த்த அரும் கொடையாகும்.

இளங்கோவடிகள், ஆழ்வார்களின், அருளிச் செயல்களை ஒப்பப் பாடியிருக்கும் சில பாடல்கள், நாலாயிரமோ என்று நம்மை ஐயுற வைக்கும் கனிவு மிக்கன.

*“சேவகன் சீர் கேளாத செவிஎன்ன செவியே*
*திருமால் சீர் கேளாத செவிஎன்ன செவியே”*

என்றும்,

***“கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே***
***கண்ணிமைத்துக் காண்பார்தாம் கண்ணென்ன கண்ணே”***

என்றும்,

*“மடம்தாழும் நெஞ்சத்துள் கஞ்சனார் வஞ்சம்*
*கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்ற*
*படர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது*
*நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே*
*நாரா யணாஎன்னா நாவென்ன நாவே”*

என்றும் வரும் படர்க்கைப் பரவல் பகுதிகள் வைணவர்களுக்குப் பெருவிருந்தாய் அமைவன.



www.saivamonline.com

## சிலப்பதிகாரத்தில் முருகன் வரலாறுகள்

நிறைவாக, முருகப் பெருமானைப் போற்றியுரைக்கும், குன்றக்குரவை, வஞ்சிக்காண்டத்தின் முதற்கண் அமைகிறது. திருமால் வழிபாட்டுக்கு இணையாகச் சங்ககாலத்தில் தமிழகத்தில் சிறந்திருந்தது, முருகவழிபாடே என்பதைத் திருமுருகாற்றுப் படையானும், பரிபாடலானும் சங்க இலக்கியங்களானும் அறியமுடிகிறது. இதன் விரிவாகக் குன்றக் குரவை அமைகிறது.

> *"உரவு நீர் மாகொன்ற வேல்ஏத்திக்*
> *குரவை தொடுத்து ஒன்று பாடுகம்"*

என்று, சூரனை, வேலால் தடிந்தமையும்,

> *"சீர்கெழு செந்திலும், செங்கோடும் வெண்குன்றும்*
> *ஏரகமும் நீங்கா இறைவன்"*

என்று, அவன் எழுந்தருளியிருந்த தலங்களும்,

> *"அணிமுகங்கள் ஓராறும், ஈராறு கையும்*
> *இணையின்றித் தானுடையான்"*

என, அவன் திருவுருவச் சிறப்பும்,

> *"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்*
> *திருமுலைப்பால் உண்டான்"*

எனக் கந்தபுராண வரலாற்றுச் செய்தியும், பிணிமுகம் கொண்டு அவுணர் பீடழித்தமையும், குருகுபெயர்க் குன்றம் கொன்றதும், முருகன், ஆலமர்ச் செல்வன் என்பதும், குன்றக் குரவையுள், அழகு பொதுள இசைப் பாடல்களில் வைத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான, மிகச் சிறந்த பதிவுகளைக் கொண்டிலங்கும் சிலப்பதிகாரம், வைதிக சமயங்களுக்கு வழங்கும் அருட்கொடைகள் நன்றியுடன் நினைவு கூர்ந்து போற்றத்தக்கன.

## மணிமேகலை

இனி, சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையில், சில குறிப்புக்களைக் காணலாம். அது, முழுக்க முழுக்க, பௌத்த சமயச் சிறப்புரைப்பதற்கென்றே எழுந்த நூல். சமயச் செய்திகளை இலைமறை காயாக எடுத்துரைக்கும் சிலப்பதிகாரத்தின் அழகிய இலக்கியக் கலை



www.saivamonline.com

வடிவத்தை, அதில் தேட இயலாது. மேலும், இயற்கை இறந்த செய்திகளின் பெருக்கத்தால், பயில்வார் நெஞ்சில், காப்பியச் செய்திகள் பெரிதும் நிலைபெறுதல் இல்லை. மணிமேகலையின் சில காதைகள், முழுக்க முழுக்க, மதவாதங்களை மட்டுமே கொண்டிருப்பதால் பயில்வார்க்கு, அவை மனச் சோர்வைத் தருவன. என்றாலும், தொன்மைக் காப்பியங்களுள் ஒன்று என்ற வகையில், அது, தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறும் இடம் சீரிது, சங்க காலத்தை ஒட்டிய காலப்பகுதியில், தமிழகத்தில் நிலவிய பல்வேறு சமயங்களையும், அவற்றின் கோட்பாடுகளையும் அறிந்துகொள்வதில் மணிமேகலை வழங்கும் கொடை உயரியது.

---

*சமயச் செய்திகளை இலைமறை காயாக எடுத்துரைக்கும், சிலப்பதிகாரத்தின் அழகிய இலக்கியக் கலை வடிவத்தை, அதில் தேட இயலாது. மேலும், இயற்கை இறந்த செய்திகளின் பெருக்கத்தால், பயில்வார் நெஞ்சில், காப்பியச் செய்திகள், பெரிதும் நிலைபெறுதல் இல்லை. மணிமேகலையின், சில காதைகள், முழுக்க முழுக்க, மதவாதங்களை மட்டுமே கொண்டிருப்பதால் பயில்வார்க்கு, அவை மனச் சோர்வைத் தருவன.*

---

## மணிமேகலையில் அறங்கள்

மணிமேகலையின் தொடக்கத்தில், விழாவறை காதை அமைகிறது. இதில், இந்திரனை நிலவுலகத்துக்கு அழைத்து, அவனுக்கு நகர மக்கள் எடுக்கும் பெருவிழாப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவை பலவும், முன்னரே சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றவை என்பதால் தனியே இவற்றை எடுத்துரைக்கும் தேவை எழவில்லை. அறவண அடிகளின் அறவுரைகளாக வரும்,

*"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்*
*பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்*
*பற்றின் வருவது முன்னது, பின்னது*
*அற்றோர் உறுவது அறிக"*

என்ற பகுதி, சமயங்கடந்து எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவாக நிற்றல், நோக்கி மகிழத்தக்கது. மக்கள் யாக்கையின் இழிவை, மணிமேகலை விரிவாக எடுத்துரைக்கிறது.



www.saivamonline.com

*"பற்றின் பற்றிடம், குற்றக் கொள்கலம்,*
*புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை;*
*அவலம், கவலை, கையாறு, அழுங்கல்;*
*தவலா உள்ளம் தன்பால் உடையது*
*மக்கள் யாக்கை"*

என வரும் பகுதி, தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய சைவ சமய நூலாசிரியர்களாலும் ஏற்றுப் போற்றப் பெற்றவை.

மேலும் மணிமேகலை, முருகப்பெருமானை உவமையாக நிறுத்திக் குருகு பெயர்க் குன்றம் கொன்றோன் எனப் பதிவு செய்கிறது. வைதிக பிராமணர்கள் வேள்வி இயற்றியமையை

*"பார்ப்பன முதுமகன் படிம உண்டியன்*
*மழைவளம் தரூஉம் அழல ஓம்பாளன*

எனக் குறித்துக்காட்டி, வேத வேள்வியின் பயன், மழைவளம் என்பதை, ஏற்று நிறைகிறது. வைதிக சமயத்தார் குமரித் துறையிலும், காவிரியிலும் நீராடி மகிழும் திறமும், இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. கொற்றவையைக் காடமர் செல்வி என்று மணிமேகலை பதிவு செய்கிறது.

## ஆட்சியாளர் நெறி

நாடாள்வோனின் நேர்மையும், ஒழுக்கமும், சமூக உயர்ச்சியோடு தொடர்புடையன என்பதை, வைதிக சமயங்கள் ஏற்றுப் போற்றுகின்றன. இக்கருத்தைச் சீத்தலைச் சாத்தனார்,

*"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்*
*கோள் நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்*
*மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை*
*மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்*
*தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்"*

என விரித்துரைக்கிறார். மேலும், வைதிக சமயம் போற்றும், திருமகளாகிய இலக்குமியே, அடுத்த பிறவியில் மணிமேகலையாகப் பிறப்பாள் என்று கந்திற்பாவை உரைப்பதாக ஆசிரியர் தெரிவிக்கிறார்.

## பசிப்பிணி

பசி ஒரு பெரும் துன்பம் என்பதைச் சீத்தலைச் சாத்தனார்,



www.saivamonline.com

*"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்*
*பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்*
*நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்*
*பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவி"*

என விரித்துரைப்பார். பிற்காலத்தே, முருக நெறிக்குப் பெருமை சேர்த்த அருணகிரிநாதரும், சிவநெறி மறவாச் சித்தர்கணத்தாரும், சமரச சுத்த சன்மார்க்கம் கண்ட வடலூர் வள்ளலாரும், பசிப்பிணியின் கொடுமை கூறி, அதனைக் களைந்திடுமாறு அறைகூவல் விடுத்துள்ளமை ஒப்பு நோக்கத்தகன. தானங்களில் சிறந்த தானம், அன்னதானமே என்பதை,

*"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம்விலை பகர்வோர்*
*ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்*
*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை*
*மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"*

என, அழகுற மணிமேகலை பதிவு செய்யும். வைதிக சமயங்கள் பசித்தோர் முகம் பார்த்தலையும், உண்ணும்போது ஒரு கைப்பிடி இடலையும், பேரறங்களாகவே போற்றி நின்றன. உயிர்க்கொலை, மற்றும் புலைப்பொசிவை, இந்து மதம் ஏற்றுரைக்கவில்லை. மதுவையும் அது கண்டித்தது. இதனை,

*"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்*
*கயக்கறு மாக்கள் கடிந்தனர்"*

என்று உரைக்கிறார் சாத்தனார். கற்புடைய பெண்டிரைத் தெய்வமாக ஏற்றுப் போற்றுதல், வைதிக நெறி. சாத்தனார், வள்ளுவரை நினைவூட்டி,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்ற அப்
பொய்யிற் புலவர் பொருளுரை தேராய்"

என மாதர் அறம் கூறுகிறார்.

---

*பிற்காலத்தே, முருக நெறிக்குப் பெருமை சேர்த்த அருணகிரிநாதரும், சிவநெறி மறவாச் சித்தர்கணத்தாரும், சமரச சுத்த சன்மார்க்கம் கண்ட வடலூர் வள்ளலாரும், பசிப்பிணியின் கொடுமை கூறி, அதனைக் களைந்திடுமாறு அறைகூவல் விடுத்துள்ளமை ஒப்பு நோக்கத்தகன.*

---



www.saivamonline.com

தத்துவக் கோட்பாடுகளில்தான் மணிமேகலை வைதிக சமயங்களோடு மாறுபடுகிறதேயன்றி, அறக்கோட்பாடுகளில் ஒன்றுபட்டே நிற்கிறது.

*"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்*
*மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளு மல்லது*
*கண்டது இல்"*

என்பது பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கை. பேதமை, செய்கை, உணர்வு, அருவுறு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பாவம், தோற்றம், வினைப்பயன் என்னும் இப்பன்னிரண்டனையும் அறிவதே நிர்வாண நிலை என்றும் பௌத்தம் கூறும்.

***பேதமை, செய்கை, உணர்வு, அருவுறு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பாவம், தோற்றம், வினைப்பயன் என்னும் இப்பன்னிரண்டனையும் அறிவதே நிர்வாண நிலை என்றும் பௌத்தம் கூறும்.***

## மணிமேகலை பண்பு

காஞ்சிபுரத்தில், மணிமேகலை பல்வேறு சமயவாதிகளைச் சந்தித்து, அவர்தம் சமயக் கோட்பாடுகளைக் கேட்டு அறிகிறாள். அதுவே, மணிமேகலையில் இடம்பெற்றுள்ள சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை என அமைவது. இதில், வைதிக சமயங்களைச் சார்ந்த சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி என்போர் விரித்துரைக்கும் சமய உண்மைகள், அக்காலத்தே வைதிக சமயங்களில் தத்துவக் கூறுகள் வரையறுக்கப்பட்டிருந்தன என்பதை அறிய உதவுகின்றன. வைதிக மதங்களையோ, அவற்றின் கொள்கைகளையோ, பெரிய அளவில், தத்துவ ரீதியாக, மணிமேகலை மறுத்துரைத்ததாகக் குறிப்புக்கள் இல்லை.

*"மெய்த்திறம் வழக்கு என விளம்புகின்ற*
*எத்திறத்திலும் இசையாது இவர் உரை"*

என்பதற்கு மேலாக வேதமதக் கண்டனம் ஏதும் இந்நூலில் இல்லை. மேலும் மணிமேகலையின் பண்பட்ட உள்ளத்தை,

*"நன்று அல ஆயினும் நான்மாறு உரைக்கிலேன்"*



www.saivamonline.com

என, அவள் மறுப்புரைக்க விரும்பாமை கொண்டு அறியலாம்.

இவ்வாறு பொதுவான அறங்களை விரித்துரைத்து, பௌத்த மதக் கோட்பாடுகளைப் பதிவு செய்து, மணிமேகலை நிறைவு பெறுகிறது.

## ஆய்வு முடிவுகள்

ஐம்பெருங்காப்பியங்கள் தோற்றங்கொள்வதற்கு முன்னரே, தமிழகத்தில், வேத வழிப்பட்ட, வைதிக சமயங்கள் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன.

அறுவகைச் சமயங்களில் காணாபத்தியம் தவிர, எஞ்சிய சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் ஆகிய நெறிகள் பெருமளவிலும், சௌரம் ஓரளவும் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தமையை இவ்வாய்வு தெளிவு படுத்துகிறது.

சீவகசிந்தாமணி, வடபுலத்தில் நடந்த கதை நிகழ்வுகளைக் கொண்டிருப்பதால் ஒப்பாய்வில், அது தரும் கொடை சிறிதே. அது வழங்கும் யாப்புக் கொடை மற்றும் தமிழ்ச்சுவை பெரிது.

வளையாபதி, மற்றும் குண்டலகேசியுள், சமயம் சார்ந்த ஒப்புமைக் கூறுகள் ஏதும் இல்லை. மணிமேகலை சங்க காலத்தில் தமிழகத்தில் நிலவிய வைதிக சமயங்களின் தத்துவக் கோட்பாடுகளை முதல்முதலாக அறிய உதவி செய்து நிற்கிறது. தமிழகத்தில், பெரும் சிறப்புற்றுத் திகழ்ந்த, இந்து மதம் மற்றும் அறங்கள் குறித்த, அதிக தகவல்களைத் தரும் ஒரு கருவூலம், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்.

சமண-பௌத்த சமயங்களின் வருகையால், வைதிக மதங்களுக்குப் பெரிய பின்னடைவு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. காரணம், ஆட்சியாளர்களும், தமிழ் மக்களும், தத்தமது சமயத்தில் ஊன்றி நின்றமையேயாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப்பின், அறுசமயங்கள் பெற்ற மாபெரும் வளர்ச்சிக்குரிய மூலக் கூறுகள் எவை என்பதை இவ்வாய்வு இனங்காட்டுகிறது.

ஆய்வுகள், மேலும் நுட்பமாகவும் விரிவாகவும் மேற்கொள்ளப்படும் போது வேறு பல அரிய முடிவுகளும் வெளிவரக்கூடும். அத்தகு ஆய்வுகளுக்கு இக்கட்டுரை அடித்தளமாக விளங்கும் என்பது உறுதி. நம் வைதிக சமயத்தின் தொன்மையும் பெருமையும் இச்சமயங்களின் ஊற்றத்தால், செந்தமிழ், முத்தமிழாக உயர்ந்தோங்கிய திறமும் நம்மை இறும்பூது கொள்ள வைக்கின்றன.



www.saivamonline.com